மூலிகை மணி

வேலூர் மருத்துவர் :- ஆ.இரா.கண்ணப்பர்

மலர் 10] ஆனந்த ௵ — ஆவணி ௴ [இதழ் 10

[175-வது மூலிகை.]



சீத்தாப்பழம்

[விலை 50-காசு

'மூலிகை மணி'

(சித்த மருத்துவ மாத இதழ்)

ஆசிரியரும் அச்சிட்டு வெளியிடுபவரும்,

வேலூர் மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R.M.P.

ஆண்டு சந்தா ரூ. 6—00 தனி இதழ் : 50-காசு

ஆவணி இதழில்

தொலைபேசி எண் : 726 த. பெ. எண் : 126

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1 (வ. ஆ.)

உ
திருமுருகன் துணை.



சிந்தையடக்கி நான்!

பல்லவி

சிந்தையடக்கி நான் திருந்தியே வாழ்ந்திட
கந்தா உனைத்தொழுதேன் கருணைபுரிவாய் ஐயா!
(சிந்தை)

அனுபல்லவி

நிந்தனை செய்தவர்க்கும் அருள்புரியும் வேலா!
நீஎனை மறப்பது நீதியோ புகல்வாய்!
(சிந்தை)


சரணம்

குன்று தோராடிடும் குமராமால் மருகாநான்
என்றுமுனை மறவா இயல்பினை அருள்வாய்!
அன்று நக்கீரனுக் கருளிய முருகா!
இன்றுநான் படும்துயர் என்றுநீ களைவாய்!
(சிந்தை)

இன்பதுன் பங்களால் என்மனம் மாறுமல்
இருக்கும் வரமதனை எந்தனுக் கருள்வாய்!
மன்னுயிர்க் கெல்லாம்நான் அன்பு செலுத்தியே
மாண்புறு தொண்டுசெய் மனதைநீ நல்குவாய்!
(சிந்தை)

o

[A. பழனிசாமி, B A., B. T., சேலம்-3]



செய்தி : A. T. C. ஊசி போட்டு ஒருவர் மரணம்!

ஐந்துகரத்தனை யானைமுகத்தனை இந்தினிளம்பிறை போலுமெயிற்றினை
நந்திமகன்றனை ஞானக்கொழுந்தனை புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூலிகை மணி

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே. — (தாயுமானவர்)

மலர் 10] ஆனந்த ஆடி — ஆவணி மீ ஆகஸ்-74 [இதழ் 10

சித்த மருத்துவ சங்கங்களின் சிந்தனைக்கு

தேவை: மறுமலர்ச்சி எண்ணம்!

தமிழகத்தில் வாழ்ந்து வரும் சித்த மருத்துவர்கள் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் மேற்பட்டதாகும். இவ்வளவு சித்த மருத்துவர்கள் தமிழகமெங்கும் பரவலாக இருந்தும், அரசாங்கத்திடம் சித்த மருத்துவம் முழுவளர்ச்சியைப் பெறாததற்கு காரணம், சித்த மருத்துவர்கள் தங்கள் உரிமைக் குரலை முறையாக ஒற்றுமையாக வெளிப்படுத்தாமையே ஆகும். 'ஓமியோபதி வைத்தியர்கள்' தங்கள் பெயரில் ஊருக்கு ஒரு சங்கம் நிறுவி, அவர்கள் மக்களிடையே ஓமியோபதி பற்றி தெளிவான ஒரு கருத்தைப் பரப்பி வருகின்றார்கள். ஆனால், சித்த மருத்துவர்கள் மாவட்டத்திற்கு ஒரு சங்கம் அமைத்திருப்பதுகூட அபூர்வம். அப்படி அமைத்திருந்தாலும், அது செயல்படும் விதம் மிக பரிதாபத்திற்குரியது.

ஆண்டுக்கொரு முறை 'மாநில மாநாடு' என்று சில சித்த மருத்துவர்கள் கூடி, "தலைவர், செயலாளர், வரவேற்பு கமிட்டித் தலைவர், செயலாளர்" என்று பல பதவிகளை அமைத்து, அதற்காக "எனக்குத்தான் தலைவர் பதவி, எனக்குத்தான் செயலாளர் பதவி" என்று அற்ப பதவிக்காக போட்டி போட்டு, பிறகு ஒரு நாள் 'மாநில மாநாட்டை'க் கூட்டி, அமைச்சரை அழைத்து, அவருக்கு பாராட்டிதழ் வாசித்தளித்து, கடைசியாக சில தீர்மானங்களை அச்சடித்து அவரிடம் கொடுப்பார்கள். விருந்தும் இடையே நடக்கும். ஷ மருத்துவர்கள் கூட்டம் மாலையில் நடக்கும். அதில் சங்கத் தலைவரையும், சிறப்பு விருந்தினராக வந்திருப்பவரையும் (அவருக்குத் தகுதி உள்ளதோ—இல்லையோ) வானளாவப் புகழ்ந்து பேசி கூட்டத்தை முடிப்பார்கள். அத்துடன் அந்த ஆண்டின் நிகழ்ச்சி முடிந்துவிடும்.

கடந்த 15, 20 ஆண்டுகளாக எவ்வித மாற்றமுமின்றி இங்ஙனம் சித்த மருத்துவ சங்கங்கள் இயங்கி வருகின்றன.

இந்த பரிதாப நிலையை அமைச்சர்கள் முதல் அதிகாரிகள் வரை புரிந்துகொண்டு, சங்கங்கள் தரும் தீர்மானங்களை, மாநாடு முடிந்தவுடன் குப்பையில் எறிந்து விடுவார்கள்.

இந்த நிலை மாறவேண்டும். என்னதான் அரசும், தனிப்பட்ட வர்களும், வளர்ச்சிக்குரிய திட்டங்களை அளித்தாலும், மக்கள் மனதிலே ஊன்றும் வகையில், தம் மருத்துவத்தை பரப்பிட சித்த மருத்துவர் சங்கங்கள் பணியாற்றிட வேண்டும். இது ஒருவகையில், பயன்கருதாப் பணியாகும்.

வெற்று ஆரவாரத்திற்குரிய பதவிகளுக்கு அலையும் சிலரையும், 'அமைச்சரிடம் நெருக்கமாகப் பழகுபவன்' என்று மற்றவர்கள் நினைக்கு மளவிற்கு டாம்பீகமாக நடக்கும் சிலரை துதிபாடுவதும், சித்த மருத்துவ சங்கங்களின் செயலாக இருந்து வரும் பரிதாபநிலை மாறவேண்டுமானல் சித்த மருத்துவ சங்கங்களின் அமைப்பு செயல்முறையில் "மறுமலர்ச்சி எண்ணம்" ஏற்பட்டே தீரவேண்டும். அதற்குரிய மூன்று வழிகளை மூலிகை மணி அறிவுறுத்துகின்றது.

'சங்கம்' என்ற பெயரையே நீக்கிவிட்டு, "சித்த மருத்துவ மறுமலர்ச்சிப் பேரவை" என்ற புதிய பெயரில், ஊருக்கு ஒரு அமைப்பு தேவை. சித்த மருத்துவத்தில் ஆர்வம், அறிவு உள்ள 20 பேர்கள் இருந்தாலும் போதும், அவர்கள் இப்படிப்பட்ட அமைப்பை நடத்தலாம்.

இதன் நோக்கம் :

சித்த மருத்துவ கோட்பாடுகளை மக்களிடையே இடைவிடாது பரப்பும் பணியாக, வாரம் ஒரு நாள் மக்கள் கூடும் ஒரு மன்றத்தில் ஏதாவது ஒரு நோயைப் பற்றிய ஆய்வு சொற்பொழிவாக அமைத்துக் கொண்டு கூட்டம் நடத்துதல் வேண்டும். அக்கூட்டத்திற்குத் தலைமை யாளராக ஊர்ப்பிரமுகரை அழைத்துக் கொண்டு, 1 மணி நேரம் ஆய்வு சொற்பொழிவாகவும், பிறகு அவையோர் கேள்வி நேரமாகவும் நிகழ்ச்சி யை நடத்தினல், மக்களுக்கும்—சித்த மருத்துவர்களுக்கும் நெருக்கமான பிணைப்பு ஏற்படும்.

மாதந் தோறும் மூலிகைக் கண்காட்சி போன்றவைகளை விரிவான முறையில் அமைத்து, பலன் தரும் எளிய சிகிச்சை முறைகளை பரப்பலாம்.

அரசாங்கத்திடம் சலுகைகளைப் பெறுவதற்கு போராடுவதைவிட சித்த மருத்துவ வளர்ச்சிக்குரிய திட்டங்களை வெறும் தீர்மானங்களாகப் போடாமல், போராட்டம் மூலம் நிர்பந்தப்படுத்தல் வேண்டும்.

இந்த 3 நோக்கங்களை மையமாகக் கொண்டு, சித்த மருத்துவ சங்கங்கள் தனது பாதையை 'மறுமலர்ச்சி எண்ணம்' என்ற புதிய பாதையில் திருப்புமேயானல், சித்த மருத்துவம் மக்கள் அவையில் எதிரொலித்து, அரசின் கவனத்தையும் தம்பால் ஈர்க்கும்.

இனியாவது, சித்த மருத்துவ சங்கங்களின் சிந்தனையில் மறுமலர்ச்சி தோன்றட்டும்!

◎

உ

முருகா.



— முன் மாதத் தொடர்ச்சி

கர்ப்ப ஸ்திரீகளுக்கு பேதியாக

சூரத்து நிலாவாரை இலையைச் சூரணம் செய்துகொண்டு சூரணத்திலிருந்து 3 சிட்டிகை எடுத்து வெந்நீர் விட்டு குழைத்து இரவு சாப்பாட்டிற்குப் பின் நெல்லிக்காய் பிரமாணம் கொடுத்து மேலே கொஞ்சம் வெந்நீர் கொடுக்கவும். காலையில் பலதடவை பேதியாகும். வாய்வு, பித்தம், கபம் போகும். இதை புருஷர்களுக்கும் கொடுக்கலாம்.

தட்டை கிருமிகள் வெளிப்பட

மாதுளைச் செடியின் வேர்ப்பட்டையை சிதைத்து 200 கிராம் எடுத்து அரைபடி தண்ணீரில் போட்டு கொதிக்கக் காய்ச்சி, கால் படியாக ஆனவுடன் வடிகட்டிக் குளிரவைத்து 50 மில்லி அளவு விடியற்காலம் கொடுத்துப் பின், அரைமணிக்கொரு தடவையாக நான்கு முறை கொடுத்த பின், சிற்றாமணக்கெண்ணெய் 25 மில்லி கொடுக்க 12 மணி நேரத்திற்குள் தட்டை கிருமிகள் வெளிப்படும்.

பேதியாவதற்கு

காக்கட்டான் விதையைப் பொடி செய்து அரை முதல் ஒரு ரூபாய் எடை வாயில் போட்டு தண்ணீர் குடிக்க நன்ருக பேதியாகும்.

வயிற்றுப் புழு நீங்க

வாய்விளங்கத்தைப் பொடி செய்து 1 முதல் 4 விராகனிடை காலை 6 மணிக்கு கொடுத்து, 8 மணிக்கு சிற்றாமணக்கெண்ணெய் கொடுக்க பூச்சிகள் கூட்டோடு வெளிப்படும்.

மலச்சிக்கலுக்கு

திப்பிலி, சுக்கு, சீரகம், ஓமம், திப்பிலி மூலம், இந்துப்பு வகைக்கு கால் பலம், கடுக்காய் 1 பலம் தனித்தனியாக இடித்து ஒன்ருகக் கலந்து, இரவு படுக்கப்போகும்போது ஒரு சிட்டிகை வெந்நீரில் கலந்து குடிக்க காலையில் சுத்தமாக மலம் போகும். காலையிலும் சாப்பிடலாம்.

உடம்பிலுள்ள சுண்ணும்பு நீங்க

மஞ்சள் செடி பச்சையாக வேரோடு இரண்டு கொண்டுவந்து ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி அரைக்கால் படியாக்கி சூர்எள்ளு எண்ணெய் 1 பலம் சேர்த்துக் காலையில் சாப்பிடவும். இவ்விதம் 3 நாள் கொள்ளவும்.

வாய்வு நீங்க

சுக்கு, மிளகு, சீரகம், காய்ந்த கறிவேப்பிலை, இந்துப்பு, சட்டியில் பொரித்து எடுத்துக்கொண்ட காயம் வகைக்கு அரை பலம் தனித்தனியாக இடித்துக் கலந்து வைத்துக்கொண்டு 1 சிட்டிகைத் தூளை பால் சாதத்தில் கலந்து இரவு சாப்பிட வாய்வு நீங்கும்.

நீர்த்தாரை பேதிக்கு

ஒரு படி மோரில் கால் படி பிரம்மதண்டிச் சாற்றை சேர்த்து காலை 6 மணி முதல் 10 மணி வரை கொஞ்சம் கொஞ்சமாகக் குடிக்கக் கொடுக்க நீர்பேதியாகி மூத்திரப்பை சுத்தியாகும்.

(தொடரும்)

மூலிகை காயகல்பம்

[முப்பு கலந்த முறை]

இம்முறை பல்லாண்டுகளாக ஆய்வுசெய்து, உடல் உள்ளம் ஆகிய இரண்டிலும் நல்ல தூய்மைசெய்து, நோய்களை நீக்கவல்லது சக்தி வாய்ந்த மருந்துகளையும், மூலிகைகளையும், மாழைப்பொருள் களையும் கொண்டு தயாரிக்கப்பட்டது.

இதனை நமது மூலிகை மணி வாசக, சந்தா அன்பர்களுக்கு மட்டும் வினியோகிக்க ஆசிரியர் அவர்கள் மேற்பார்வையில் தயாரித்த ஒன்றாகும். இம் மூலிகை காயகல்பம்—குறிப்பாக உடல் சக்தியிழந்தவர்களுக்கும் தாது, குருதி குறைந்து, இல்வாழ்க்கைக்கு தகுதியற்றவர்களாகத் தன்னைப் பலவிதத்திலும் பாழ்படுத்திக் கொண்டவர்கட்கு மிகவும் சிறப்பாக பலன் தரக்கூடியது.

நீடித்த நோய்களில் சக்தியை இழந்து விட்டவர்களும் 1-மண்டலம் (அல்லது) 2-மண்டலம் சாப்பிட்டுவர இயற்கையில் சக்தி ஊட்டம் பெற்று, இல்லற சுகங்களை மீண்டும் பெற வழியாகும்.

---

1. மூலிகை காயகல்ப பொடியும்,
   செந்தூரப் பொடியும்,
2. மூலிகை கலவை இளகல் (அரை கிலோ)

ஒரு செட் ரூ. 140—00 ஆகும்.

V. P. P. யிலோ, அல்லது பார்சல்வழி அனுப்ப இயலாது.

இதனை நேரில்

மருத்துவர் ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.

அவர்கள் மருத்துவ ஆலோசனையுடன்

ஞாயிறு கிழமைகளில் மட்டும்

23, கிளப் ரோடு-கிழக்கு, ஷெனாய் நகர், சென்னை-30

மற்ற நாட்களில்

4, சாதுகார மடம் 2-வது தெரு, சலவன்பேட்டை, வேலூர்-1

முகவரிகளில் வந்து பெறலாம்.



சீத்தாப்பழம்

(175-வது மூலிகை)

சீதாப்பழம் தெரியாத நமது தமிழ் மக்களை காணுவதரிது. ஏன்? அடுத்த மாநிலங்களான ஆந்திரம், மஹாராஷ்டிரம், மைசூர் ஆகிய இடங்களிலும் காடாக வளர்கிறது. சீதாச் செடி ஒரு குத்து மர செடி வகுப்பைச் சார்ந்தது. இந்த மரத்தை பார்க்கும்போது நமக்கு அலங்காரமான தோற்றம் அளிக்கும். காய்கள் உருண்டையாக செதில் செதிலான வடிவம் கொண்டது. இதன் காய்களை பக்குவநிலை வரும்போதே பறித்து பழுக்கவைத்து விடுவார்கள்.

பழங்களிலேயே அதிக ருசியுள்ள பழம் சீதாப்பழம் தான். "வாழைப்பழம் வேண்டாத குரங்குண்டோ?" என்ற பழமொழி போல, சீதாப்பழம் வேண்டாத பெண்கள் உண்டோ? என்றுகூட சொல்லலாம். அவ்வளவு உயிர் சீதாப்பழம் என்றால் பெண்களுக்கு! பருவகால மழையில் எங்கிருந்தாலும் சீதாப்பழம் பெண்கள் மடிக்கு ஓடிவந்து விடும். அதிலும் கருவுற்ற மாதர்களுக்கு 'சீதாப்பழம்' எப்படியாவது கிடைத்துவிடும்!

சீதாப்பழத்தில், ஒவ்வொரு கண்ணுக்கு ஒரு சுளையும், கொட்டையும் இருக்கும். கொட்டை கருப்பு நிறமாகவும், சுளை வெண்மையாகவும் இருக்கும். கொட்டையை நீக்கிவிட்டு சுளையை மட்டும் உண்பார்கள். பெண்களுக்கு அடுத்தபடியாக சீதாப்பழத்தை உண்பதில் முஸ்லிம் மதத்தவர் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். அவர்களில் சிலர் சீதாப்பழத்தை வேண்டுமளவு தின்றுவிட்டு, உடனே வாயில் விரலை விட்டு தின்ற பழம் எல்லாவற்றையும் வாந்தி எடுத்து விடுகிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்றால், சீதாப்பழம் பித்த மிகுதி. அதனால் வேறு பல நோய்கள் உண்டாக்கின்றது என எண்ணினார்கள். எனவே தான் அவ்வாறு வாந்தி எடுப்பது வழக்கம். ஆனாலும் சீதாச் செடி மருத்துவ பயன்களுக்கு ஆகும்.

மருத்துவப் பயன்கள்

(1) இதன் இலைச்சாற்றை மூக்கில் பிழிய மூர்ச்சை ஓடிப்போகும்.

(2) இதன் இலையை நீர்விடாமல் நெய்போல் அரைத்து, ஆறாத இரணங்களுக்கெல்லாம் பூசிவர அவை ஆறும்.

(3) இதையே உள்ளுக்கு கொடுக்க வயிற்றிலுள்ள புழுக்களைக் கொன்று மலத்தின் வழியே வெளித்தள்ளும்.

(4) இதன் பட்டையை குடிநீரிட்டுக் குடிக்க உடல் பலப்படுவதுடன் உடல் பெருக்கும்.

(5) வேர்ப்பட்டையை அரைத்து தக்காளியுடன் வென்னீரில் கலந்து கொடுக்க பேதியாகும்.

(6) சீதாப்பழத்தின் கொட்டைகளை உலர்த்தி இடித்துத் தூள் செய்து புண்கள் மீது தூவ, அவைகளில் உள்ள அழுக்கை அகற்றி, அவைகளை எளிதில் ஆற்றும்.

(7) பிஞ்சு அதிக துவர்ப்புடையதால், இதனை அரைத்து பேதி, சீதபேதிகளை நிறுத்த சுண்டை முதல் நெல்லிக்காயளவு கொடுக்கலாம்.

சீதாப்பழத்தின் குணம் பித்தத்தையும், கபத்தையும் அதிகரித்து நோய்க்கு இடம் தரும். அக்கினிமந்தம், சித்தப்பிரமை ஆகியவற்றை உண்டாக்கும் என்றாலும் இதை மணப்பாகு செய்து, உடல் வெப்பத்தை தணிக்க உபயோகித்து வருகிறார்கள்.

"பித்தகப மெத்தப் பெருகுமந்த மேலாகுஞ்
சித்த மதிற்றயக்கஞ் சேருங்காண் — நந்துலவும்
பூத்தானத் தாறும் புலன்கொடியே! பூவுலகிற்
சித்தாக் கனிக் குணத்தைத் தேர்"

(கு. மு.)

சித்தர் வழி!

சித்தர்கள் வழிப்படி, வெளியுள்ள இவ்வுலகத்திற்கும் மனிதனுள்ளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. உண்மையாகவே, மனிதன் அண்டத்தின் ஓர் சிற்றுருவமே ஒழிய வேறல்ல. ஆகவே எப்படி பிரகிருதியின் மூலப் பொருள்களினால் இவன் உடர்பு ஒரு பாகமாக ஏற்பட்டிருக்கிறதோ, அதே மாதிரி இவன் ஆன்மாவும், மனதும் உள்ளபடி தேக அமைப்பில் ஒரு பாகமாக ஏற்பட்டிருக்கிறது. மனிதனைவன் தன் தசை, எலும்புகள், நரம்புகள், தத்துவங்கள் இவைகளினால் மாத்திரம் ஆக்கப்பட்டவனல்ல; இவன் அண்டத்தின் சிறு பாகத்தையும் உள்ளவனாகக் கொள்ள வேண்டும். சித்தர்கள் இது விஷயத்தில் கொண்ட கருத்தை வீண் மனோராச்சியமென்று எண்ணக் கூடாது. ஏனெனில், ஒவ்வொரு நூல் வகையிலும், அவர்கள் மேற்கொண்ட சம்வாதத்தையும், ஒழுங்கு முறைமையையும், அன்றியும் அவர்கள் தங்கள் ஆழ்ந்த சிந்தனையையும், நுண்ணறிவையும், புகட்டியுள்ளதை நோக்குமிடத்து, அவர்களின் தேக தத்துவ முறைமைகள் மிக்க கொண்டாடத் தக்கதாகும். வனாந்தரங்களில், தங்கள் வாழ்நாட்களையெல்லாம் தியானத்திலேயே போக்கி காலங்கழித்த சித்தர்களுக்கும் ரிஷிஸ்வரர்களுக்கும், மனிதனின் தேக தத்துவம் முழுமையும், தற்கால விஞ்ஞானிகளைவிட அனேக மடங்கு அதிகமாகவே அறிந்து தெளிந்தவர்களென்றே கருதவேண்டும். அடியிற்கண்ட விஷயங்களே இதற்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டும்.

முதலாக, அவர்கள் கொள்கைப்படி பஞ்சபூதங்களாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய இவைகள் மேற்சொன்னபடி வெளிப்படையான உலகத்திற்கும், மனிதன் உள்ளுக்கும், மூல காரணமாக உள்ளது. இப் பூதங்களே, உலக சிருஷ்டி, திதி, சங்காரம் இவைகளுக்கும் முக்கிய ஏதுவாக உள்ளது. ஒவ்வொரு பூதமும், மற்ற ஐந்து பூதங்களோடு கலந்து இருப்பதையும் காணலாம். எவன் இந்த ஐந்து பூதங்களின் இரகசியங்களையும் கோட்பாடுகளையும் அறிகிறானோ, அவன் ஒரு உலோகத்தை பிறிதொரு உலோகமாக மாற்றக்கூடும். ஏனெனில், எல்லா பொருள்களும் ஆதிமூல வஸ்துவாகிய ஒன்றிடத்தே தோன்றியது. ஆகவே ஏகபூதம், கலப்பு பூதம் என்ற பிரிவினையே கிடையாது. மேனாடாகிய ஐரோப்பாவில் பூர்வகால மனிதர்களும் இவ்வித நம்பிக்கையுடையவர்களே; அதாவது இவ்வுலகமே மேற்கண்ட ஐந்து பூதங்களினால் உண்டானது, உலகத்து எல்லா வஸ்துக்களும் அதனிடமே தோன்றியது என்பதாக அவர்களும் கொண்ட கொள்கையினால் இனிது விளங்கும்.

இரண்டாவதாக, முப்பிணியைப் பற்றி சித்தர்கள் நூற்களில் எல்லாவித நோய்களும் வாத பித்த சிலேட்டுமக் கூறுகளின் கலப்பினுல் ஏற்படுகிறதென்று விவரமாய்க் கூறும். இந்த முப்பிணியையே, ஆயூர் வேதத்தில் திரிதோஷம் எனக் கூறப்படும் இம் முப்பிணியே மனிதனின் தேக அமைப்புக்கு முக்கியமான ஆதாரமாகும். வெளியுலகத்தில் ஏதாவது விகற்பங்கள் தோன்றினுல், மனிதனுள்ளேயிருக்கும் முப்பிணியிலும் இதே மாதிரியான விகற்பங்கள் ஏற்படும். ஆகவே இவ்விதமான அண்ட பிண்ட கலப்பு சர்பந்தந் தான், முப்பிணியின் கொள்கைக்கும், அது விஷயமான தேக தத்துவ நூலுக்கும் மூல காரணமாகவும், அடிப்படையாகவும் உள்ளது. உண்மையாகவே, உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும், இம் முப்பிணி சிறிதளவிலாவது, பெருமிதத்திலாவது கட்டுப்படாதது இல்லவே இல்லை. மனிதரின் குணுதிசயங்களும், இம் முப்பிணி செய்கையினின்று பிரிக்கமுடியாது. மேலும், சித்தர் பதார்த்த குண நூலும், இம் முப்பிணியையே அடிப்படையாகவுள்ளது. ஏனெனில் தாவர வர்க்கம், தாது வர்க்கங்களிலுள்ள எல்லா வஸ்துக்களும், இம் முப்பிணியில் ஒன்று அல்லது அதற்கு அதிகமாகவே இருக்கத்தான் செய்யும்.

மூன்ருவது, சுவாசம் (அ) மூச்சு என்பது உடம்பின் தொழில்கள் எல்லாவற்றுள்ளும் முக்கியமானதென்று கருதப்படும். ஏனெனில் மற்ற தொழில்களுக்கு இது ஆதாரமாக உள்ளது. மூச்சில்லாவிடில் உயிர் கிடையாது. மானிட தேகமான யந்திரம், பிறந்த சிசுவில் ஊசலாடும் மூச்சு முதல், மனிதன் கடைசியாக திணறும் மூச்சு வரையில் ஊடாடிக் கொண்டிருக்கிறது. இதையே 'பிராணு' என்று மாறுபடக் கூறப்படும்.

சித்தர்கள் எல்லா காலத்திலும், இடங்களிலும் இரகசியமாக தாங்கள் சிஷர்களுள் சிலபேருக்கு, சாதாரண காற்றில் பிராணு (சுத்த சக்தி) என்னும் தத்துவம் உண்டு என்றும், இதினின்றுதான் எல்லாவித செய்கைகளையும், சக்திகளையும் அடையக் கூடுமென்றும், அவைகளை அடையக்கூடிய விதத்தையும் போதித்தார்கள்.

நான்காவது, வாத முறையில் சித்தர்கள் கொண்ட கருத்தாவது இவ் விஷயத்தில் ஒருவன் ஆத்தும ஞானமுள்ளவனுயிருக்க வேண்டும். அன்றியும், பிறப்பிலேயே எப்படி ஒருவன் வைத்தியனுக இருக்க வேண்டியது அவசியமோ, அதே மாதிரி வாதியும் இருக்க வேண்டியது. தன் பூர்வ கருமப்படி, பிறக்கும் போது கிரகங்கள் சரிவர அமைந்துள்ளவனுயிருக்க வேண்டும். வாதத் தொழிலோ இலாபத்தைக் கருதி செய்யப்படாது. சித்தர்களின் அறிவின் தேர்ச்சியாலும், ஊக்கம், முயற்சியாலுந்தான் வாத முறையும் அதைச் சார்ந்த விஷயங்களும் வெளிப்பட்டதென்பதற்கு அனேக ஆதாரங்களுண்டு. தேகமும் மனதும் யாதொரு குற்றமில்லாமல் பரிசுத்தமாயிருந்தால் தான், ஆத்தும சக்தியினுல் வாதம் சித்தியாகும் என்பது பெரிய இரகசியம். முப்பு என்பதின் ஆதிமூலப் பொருள் தான் ஆத்துமாவில் உள்ளது. ஆகவே வாதநூல் என்பதின் ஓர் பாகம் தான் மானத இரசாயனம் என்பது.

பொது விற்பனைக்கு அல்ல!

சந்தா வாசக அன்பர்களுக்கு மட்டும்

எமது அரிய தயாரிப்புகள்:

முக்கூட்டு கற்ப மூலிகைத் தைலம்

எண்ணெய் ஸ்னானத்திற்கு ஏற்றது. தேக வலிமை உண்டாக்கி உடல் சூட்டைத் தணித்து, ஆரோக்கியத்தைத் தரும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

மருதோன்றித் தைலம்

தலைமுடி கொட்டுபவர்களுக்கு ஏற்றது. தலைமுடி கொட்டுவதை நிறுத்துவதுடன், கருமையாக தலைமுடியை வளர்க்கும்.

ஒரு புட்டி விலை ரூ 5—00

மூலிகை பேதி மாத்திரை

மலச்சிக்கல், மலப்புழு உள்ளவர்கள் மாதம் ஒரு முறை சாப்பிடலாம். குழந்தை முதல் பெரியோர் வரை பயமின்றிச் சாப்பிடலாம்.

25 மாத்திரை விலை ரூ. 3—00

வல்லாரைத் தைலம்

மண்டை வறட்சி, ஞாபக மறதி, வழுக்கைத்தலை, அதிஉஷ்ணம், பித்தம் ஆகியவை நீங்கி தேகம் குளிர்ச்சியாகும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

முசுமுசுக்கைத் தைலம்

தலைக்குத் தடவிவர சகல உஷ்ணமும் நீங்கும். பீனிச நோய், அகால ரோமம் உதிர்தல், ஆஸ்துமா, காசநோயுடையவர்கட்கு ஏற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

கருவேலன்பட்டை பற்பொடி

எருக்கன் பூ பஸ்பம் கலந்தது. தினசரி உபயோகத்திற்காகவும், பல்லுறுதிக்கும், பல் தூய்மைக்கும் சிறந்தது.

ஒரு பாக்கெட் விலை ரூ. 1—00

காது நோய் எண்ணெ

காதில் சீழ் வடிதல், இரத்தம் வருதல், காதுவலி, விக்கம் ஆகியவற்றிற்கு சிறந்த மூலிகைகளால் தயாரித்தது.

ஒரு புட்டி விலை ரூ. 3—00

வல்லாரைத் திப்பிலி

பள்ளி செல்லும் இளம் மாணவ மாணவியர்களின் ஞாபக மறதி நீங்கி கவனமாய்ப் படித்து தேர்வு எழுதி முதன்மையாகத் தேரலாம்.

40-நாள் மருந்து பாக்கெட் விலை ரூ. 5—00

பொன்னுங்கண்ணி தைலம்

அசல் பொன்னுங்கண்ணிக் கீரையால் முறைபடி தயாரித்தது. கண் ஒளிக்கும், பார்வைக்கும் சிறந்தது. தலைக்கு ஸ்னானமாகவும், தினம் தடவிக்கொள்ளவும் ஏற்றது. ஒரு புட்டி விலை ரூ. 5—00

தலைவலிக்கு தைலம்

அடிக்கடி தலைவலி வரும் அன்பர்கள் வாரம் இருமுறை இதனை தேய்த்து ஸ்னானம் செய்துவர படிப்படியாகத் தலைவலி நீங்கும்.

ஒரு புட்டி விலை ரூ. 5—00

புழுவெட்டு நீங்கத் தைலம்

தலையில் வரும் புழுவெட்டு, பொடுகு, ஆகியன நீங்க இதனை தினம் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 5—00

செம்பரத்தம் பூ தைலம்

இளம் வயதினர்கட்கு முடி செழித்து வளர தலைக்குத் தடவி வந்தால் இத் தைலம் துணைபுரியும். ஒரு புட்டி விலை ரூ. 5—00

அவுரித் தைலம்

இளநரை, தலைமுடி உதிர்தல் நீங்கி முடி செழித்து வளர தினமும் தலைக்குத் தடவி வரலாம். ஒரு புட்டி விலை ரூ. 10—00

பித்தத்திற்குச் சூரணம்

காபி, டீ, புகையிலை மற்றும் பித்தம் தொடர்பான பொருள்களை அதிகம் பயன்படுத்துவோர், இந்த சூரணப் பொடியைப் பயன்படுத்தி பித்தத்தை நீக்கலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 3—50

ஆவாரைப் பஞ்சாங்க சூரணம்

நீரிழிவு நோயுடையவர்கட்கு, அந் நோயைக் கட்டுப்படுத்தவும் காபி, டீ போன்ற பானங்கட்கு பதிலாக இதனை காபிபோல் பயன்படுத்தி நீரிழிவைக் கட்டுப்படுத்தலாம். ஒரு பாக்கெட் விலை ரூ. 5—00

தேவையான மருந்தைக் குறிப்பிட்டு, இத்துடன் தபால் செலவு ரூ. 3—00 சேர்த்து கீழ்க்கண்ட முகவரிக்கு மணியாடர் செய்தால் உடன் பதிவு பார்சல் மூலம் வரிசைக்கிரமமாக அனுப்பி வைக்கப்படும். மருந்துகள் ஒன்றுக்கு மேல் 2 (அ) 3 புட்டிகளுக்கு ரூ. 4—00ம், 4(அ)5 புட்டிகளுக்கு ரூ. 5—00 பார்சல் செலவு சேர்த்து அனுப்பவும்.

மணியாடர் கூப்பனில் தெளிவான விலாசமும், தேவையான மருந்துகளும் விபரமாக எழுதாவிடில் உடன் கவனிக்க இயலாது.

முகவரி :— ஆ. இரா. கண்ணப்பர், R. M. P.

59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-632001 (N. A.)

உ
முருகா.

நோயும் - மருந்தும்

[இப் பகுதியில் வாழ்க்கைக்குப் பயன் தரும் எந்தவித கேள்விகளும் இடம்பெறும். கேள்வி கேட்பவர்களின் பெயர் அவசியமிருந்தாலன்றி வெளியிடப்பட மாட்டாது. எல்லோருக்கும் பயன்படும் கேள்விகள் எதுவாயினும் சரி, அவைகட்கு முதலிடம் தரப்படும். இப் பகுதியில் ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து வந்த கேள்வி—பதில்களை மருத்துவ சம்பந்தப்பட்ட வரையில் தனியாக "நோயும்-மருந்தும்" எனத் தனி நூலாக வெளியிடப்பட்டுள்ளது. தேவையுள்ள அன்பர்கள் முன்பணம் மணியாடர் அனுப்பி பெறலாம். சினிமா சம்பந்தப்பட்ட கேள்விகள் கவனிக்கப் பட மாட்டாது. கூடிய வரையில் மருத்துவம், சமூகம் சமயம் பற்றிய கேள்விகளுக்குத் தான் முதலிடம்]

* * * * *

கே: சமீபத்தில் என் கணவர் வேலை நிமித்தமாக வெளியூர் சென்று அங்கு தங்கியிருந்த பொழுது "செரிப்ரல் ஹேமரேஜ்" என்ற நோய்கண்டு திடீரென்று மரணமடைந்தார். இது என்ன நோய்? இதை இனி தெரிந்துகொண்டு ஆகவேண்டியது ஒன்று மில்லாமலிருப்பினும், ஏதோ பைத்தியம் பிடித்தாற்போல் தங்களை அணுகி கேட்கிறேன். இந்த நோய் வராமல் தடுக்க மருத்துவம் கிடையாதா? தங்கள் பதிலைக் காண ஆவல்படுகிறேன்.

ப: ஓயாது ஒழியாது பாடுபடுபவர்களுக்கும், அதிக வெய்யிலில் அடிபட்டவர்கட்கும் திடீர் என்று காணும் வியாதி. இந்த நோய் தடுக்க முடியாது. வந்தவர்களும் பிழைக்க மாட்டார்கள். என்ன செய்யலாம்! மனதை தேற்றி பிள்ளைகளுக்காக கடமையைச் செய்விராக.

கே: என் மகளுக்கு 'அவுரித் தைலம்' வரவழைத்து உபயோகித்து வந்தேன். கொஞ்சம் கூட குணம் காணவில்லை. கல்லூரி மாணவி வழுக்கைத் தலையுடன் எப்படி இருப்பது? எண்ணெய் தடவினால் எல்லாம் ஒட்டிக்கொண்டு மண்டை தெரிகிறது.

இதற்கு பூரண குணம்காண வழியுண்டா? தங்கள் ஆலோசனைபடி செய்ய காத்திருக்கிறேன்.

ப: மஞ்சள் கரிசலாங்கண்ணி, வெள்ளை பூ கரிசலாங்கண்ணி இரண்டும் சமபாகம் சாறுபிழித்து, அந்த அளவு நல்லெண்ணெக் கூட்டி சாறு சுண்டக் காய்ச்சி எடுத்து வடித்துக்கொண்டு தினமும் தலைக்குத் தடவிவரச் செய்யவும். முடி அடர்ந்து வளரும்.

கே: என் தம்பிக்கு வயது 18. முழங்காலுக்குக் கீழே இரும்பு கம்பி குத்தி காயங்கள் ஏற்பட்டு 2 வருடங்களாகின்றன. அதை கவனித்து சரியான சிகிச்சை செய்யாமல் விட்டு விட்டோம். ஆஸ்பத்திரி மருந்து போட்டு வந்தோம். ஆறு மாதம் கழித்து புண்கள் தோன்றிய பொழுது, மருதோன்றி இலையும் மஞ்சளும் அரைத்து பூசியதில் குணம் கண்டேன். பிறகு, கடந்த 4 மாத காலமாக மீண்டும் புண் ஏற்பட்டு நீர் கசிந்து வருகிறது. முன் போல் மருதோன்றி இலை அரைத்து கட்டியும் பயனளிக்கவில்லை. இந்த புண் ஆறி மீண்டும் வராமல் இருக்க ஒரு வழி கூறவும்?

ப: இதற்குச் சரியான சிகிச்சை—எமது மகா மூலிகை எண்ணை ஒன்றுதான். எனவே வரவழைத்து பத்தியமுடனிருந்து சாப்பிட்டு குணம் பெறலாம்.

கே : எனக்கு மேல் பாதத்தில் புண்கள் ஏற்பட்டு, பல வருடங்களாக பல வைத்தியம் செய்து குணம்காண முடியவில்லை. இப்படி ஆருத புண்ணுக்கு தகுந்த மூலிகை வைத்தியம் இருப்பின் கூறவும் ?

ப : மேல் பாதத்தில் இரணம் கண்டு ஆருது நாள்பட்டுபோனுல் அதற்கு மேக காரிகம் என்று தமிழ் மருத்துவத்தில் கூறுவர். இதற்குச் சரியான, முறையான சிகிச்சை — எங்கள் தயாரிப்பான "மகா மூலிகை எண்ணெயை" கடும் பத்தியமிருந்து சாப்பிட எவ்வளவு நாள்பட்ட சரும நோயாக இருப்பினும் பகலவனைக் கண்ட பனிபோல மறைந்து போகும்.

கே : என் வயது 28. எனக்கு 12 வயதில் ஒரு பெண்ணும் 9 வயதில் ஒரு பையனும் இருக்கிருர்கள். இரண்டு ஆண்டுகளாக மாதவிடாய் ஆகிறபோது நெஞ்சுவலி ஏற்படுகிறது. ஊசி போட்டு பலன் காணமுடியவில்லை. மூலிகை மருத்துவம் கூறவும் ?

ப : ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் காண்பதற்கு 2 நாளைக்கு முன், முருங்கை இலையை இடித்து சாறு பிழிந்து 1 அவுன்சு, வென்னீர் 1 அவுன்சுடன் ஒரு சிட்டிகை சமையல் சோடா கலந்து குடித்துவரவும். மாமிச உணவு கூடாது. தினமும் 2 வேளை குடிக்கவும்.

கே : பெண்களுக்கு ஆண்கள் மேல் இச்சை ஏற்படாமல் இருக்க மூலிகை உண்டானுல், அதை யார் எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை கூறவும் ?

ப : இது இயற்கைக்கு முரணுனது. பாலுணர்ச்சியைக் கட்டுப் படுத்தும் மூலிகைகளை காணுவது வெகு அரிது. எனவே இம் முறை பயன் தராது.

கே : நான் ஒரு வாரத்தில் இரு முறைதான் மலம் கழிக்க முடிகிறது. அதுவும் விளக்கெண்ணை சாப்பிட்டால் தான். இப்படி பல மருந்து, எண்ணை சாப்பிட்டால் உடல் உஷ்ணம் அதிகமாகி விடுகிறது. எனவே நாள்பட்ட மலச்சிக்கலைப் போக்கி உடல் நலமடையவும், தினசரி மலம் கழிக்கவும் ஒரு முறை கூறவும் ?

ப : நிலாவரை என்ற செடி எங்கும் காணக் கிடைக்கக்கூடியது. அதை எடுத்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து வைத்துக்கொண்டு

மூன்று சிட்டிகை அளவு காலை மாலை வாயிலிட்டு வெந்நீர் குடித்துவர நாள்பட்ட மலச்சிக்கல் உபாதைவிலகி தினசரி மலத்தை வெளியேற்றும்.

கே: என் வயது 44. எனக்கு கடந்த 3, 4 மாதங்களாக மலம் கெட்டியாகவும், அதிக சிரமத்துடன் புழுக்கை போலவும் கழியும். மலம் கழிந்த பிறகு 1 மணி முதல் 3 மணி நேரம் வரை ஆசனவாயில் அரிப்பு தொடர்ந்து இருக்கிறது. இந்த நிலையை விலக்கி உடல் சீரடைய ஒரு மூலிகை மருத்துவம் கூறவும்?

ப: உங்களுக்கு மூலநோய் ஆரம்பநிலை. எனவே தான் இப்படி ஒரு தொல்லை உண்டாகியிருக்கிறது. மூலநோயைப் போக்க, துத்திக் கீரை, கருணைக்கிழங்கு, சேனைக்கிழங்கு போன்றவற்றை அடிக்கடி சாப்பிட்டுவர மலச்சிக்கல் விலகி தொல்லைகள் தீரும்.

கே: என் வயது 30. திருமணமாகி 2 குழந்தைகளைப் பெற்றவள். மூன்றாவது கர்ப்பம் தரித்து 6-வது மாதம் ஆனபிறகு வயிற்றில் அசைவு நின்றுவிட்டது. டாக்டர் பார்த்து, குழந்தை இறந்துவிட்டது என்று சொல்லி சிகிச்சை செய்து, குழந்தையை வெளியே எடுத்தார். இது குறைபிரசவம் என்று கூறி 2 புட்டி இரத்தம் ஏற்றினார்கள். இதனால் பசியின்மையும், ஒற்றைத்தலைவலியும் உண்டாகி, நீர் மஞ்சள் நிறமாக மாறி, வாந்தி எடுக்க ஆரம்பித்து விட்டது. பிறகு 1 மாதம் மருந்து சாப்பிட்டு, காமாலை வராமல் கீழாநெல்லியையும் அரைத்து சாப்பிட்டேன். நீர் மஞ்சள் நிறமாக போனாலும் காமாலை இல்லை என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். ஆனால் இப்பொழுது நெஞ்சில் ஒரு தரிப்பும், வேதனையும், அடைப்பும் உண்டாகிறது. எனக்கு என்ன நோய்? இதைப் போக்க மருத்துவ முறை ஒன்று கூறவும்?

ப: உங்களுக்கு பித்த குன்ம சம்பந்தப்பட்ட நோய் குறைப் பிரசவத்திற்குப் பின் உண்டாகியிருக்கிறது. இதற்கு சிகிச்சை தினமும் ஒரு சிறு மண்சட்டியில் பாதியளவு தண்ணீர் விட்டு, சீமைஅத்திப்பழம் என்ற பக்குவப்படுத்தப்பட்ட பழம் நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும்; அதை வாங்கி வைத்துக் கொண்டு, மண்சட்டியில் தினம் 1 பழம் துண்டாக்கி நறுக்கி ஊறவைத்து விட்டு, காலையில் எழுந்தவுடன் பல் துலக்கிய பின் அப்பழத்தை எடுத்து மென்று தின்றுவிட்டு, அந்த தண்ணீரையும் குடிக்கவும். இப்படி 40 நாள் விடாமல் செய்ய, நோய் தொல்லை விலகி நலம் காணலாம்.

கே : சூலேநோய் என்றால் என்ன? அதற்கு எந்த மூலிகை சாப்பிட்டால் குணம் காணமுடியும்? எப்படி சாப்பிடுவது?

ப : சூலேநோய் பலவிதம். சூதக சூலே, பக்கசூலே, குன்மசூலே, இவைகளுக்கு நோய் உடல் நிலே, மற்றும் நேரில் கணித்து அதற்கேற்ப மருந்து சொல்ல வேண்டுமே தவிர பொதுவாக சொல்வது பயன் தராது.

கே : ஒருவன் தன் உடல் நிறத்தை மாற்ற முடியுமா? தோலின் நிறம் பிறப்பில் கருமை. அதை சிகப்பாக மாற்றுவதற்கு வழி மூலிகை சிகிச்சையில் உண்டா? உடற்பயிற்சியினுல் பலன் கிடைக்குமா?

ப : சிலருக்கு திடீரென்று சருமநிறம் மாறி வெளுத்துப்போகிறது. இதை வெண்குஷ்டம் என்பர். இயற்கையான உடல் நிறத்தை மாற்ற எந்த மூலிகை மருந்துகளாலும் இயலாது. தாய் தந்தையர் அவரவர் உடல் நிறத்திற்கேற்றவாறு கருவிலே அமைந்தபடி உடல் நிறத்தைக் கொடுக்கிறுன். உடற்பயிற்சியினுல் உடல் வலிமை அடையுமே தவிர நிறத்தை மாற்ற முடியாது.

கே : செம்பருத்தம்பூ வென்பது — செம்பருத்திப்பூ தானே! இந்தப் பூவில் தங்கச்சத்து உள்ளது என்கிறுர்களே, உண்மையா? இதை எந்த வகையில் உட்கொள்ளவேண்டும்? அதனுல் வீரிய விருத்தி அதிகமாகி மகப்பேறும் உண்டாகும் என்பது உண்மையா?

ப : செம்பருத்தம் பூவும் — செம்பருத்திப் பூ என்பது இரண்டும் ஒன்றுதான். இந்தப்பூ அம்பாளுக்குரிய அர்ச்சனைப் பூ. எனவே இதில் எந்தவித சத்துதான் இருக்காது. சிவப்பு நிறம் தேவியின் அம்சம். இந்தப் பூவை மகரந்தத்தோடு சேர்த்து சாப்பிட்டுவர கரு உண்டாகும். இரத்த விர்த்தியும் ஏற்படும். முடி உதிர்வதைத் தடுக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இதைப் பற்றிய பயன் முழுதுமாக அறிய, எமது " நம் நாட்டு மூலிகைகள் " நூல் வெளியீட்டில் காணலாம்.

கே : எனக்கு வயது 64. நீண்டகாலமாக எனக்கு வாய் வேக்காளம் இருந்து வருகிறது. மருந்து சாப்பிட்டால் 5, 6 மாதம் குணம் தெரிகிறது. பிறகு மீண்டும் பழையபடி வேக்காளம் வந்து விடுகிறது. சாப்பாடு சரியாக செல்வதில்லே. இதை அடியோடு ஒழிக்க நல்ல மருத்துவம் கூறுங்கள்?

ப : ஆணு, பெண்ணு என்பது தெரியவில்லை. உங்கள் வயதும் 64 ஆகிவிட்டது. காலையில் தேனுடன் இஞ்சி சுரசம் கலந்து சாப்பிடவும். பகலில் சாப்பாட்டில் சுக்குத்தூள் கலந்து சாப்பிடவும். மாலையில் கடுக்காய்த் தூள் ஒரு சிட்டிகை சாப்பிடவும்.

கே : என் குழந்தைக்கு வயது 10 ஆகிறது. 2 ஆண்டுகளாக ஒரு மாதத்திற்கு ஒரு முறை காதிலிருந்து நீர் போன்று வடிகின்றது; துர்நாற்றம் வீசுகிறது. இதை தடுப்பது எப்படி?

ப : ஜாங்குமட்டை என்ற (கற்ருழை போன்ற) செடி ஒன்றின் மடல் கொண்டுவந்து வேகவைத்து சாறு பிழிந்து, அந்த சாற்ருேடு நல்லெண்ணெய் கலந்து, சாம்பிராணி கொஞ்சம் போட்டுக் காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு தினம் நான்கைந்து சொட்டுகள் காதில் விட்டு பஞ்சிஞல் அடைத்துவிடவும்.

கே : என் குழந்தைக்கு வயது 5 ஆகிறது. பிறந்ததிலிருந்து சரிவர மலம் கழிவதில்லை. உடலில் சதை பிடிக்கவில்லை. உடல் நலமடைந்து நல்ல வளர்ச்சி பெற ஒருவழி கூறவும்?

ப : மூக்கிரட்டை வேர் 1 கைப்பிடி, அருகங்கட்டை 1 கைப்பிடி, ஆமணக்கெண்ணெய் அரை லிட்டரில் போட்டு முறியக்காய்ச்சி எடுத்து வடித்து வைத்துக்கொண்டு தினமும் ஒரு தேக்கரண்டி அளவு காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கவும். இதனுல் மலச்சிக்கல் விலகி, உடலில் சதையும் பிடிக்கும்.

கே : என் சகோதரிக்கு வயது 30. சுமார் 3 வயதில், ஒரு அவரை விதை காதினுள் அடைபட்டு 10, 15 நாட்களில் வலி ஏற்பட்டு எண்ணெ காய்ச்சி ஊற்றிஞர்கள். பின்பும் அதே மாதிரி வலி அடிக்கடி ஏற்பட்டது. 8 வயதில் சிகிச்சை செய்து, அந்த விதை எடுக்கப்பட்டது. ஆனுல் அது முதல் காது கேட்பதில்லை. பிறகு ஆபரேஷன் செய்யச் சொன்ஞர்கள். ஆனுல், நாங்கள் செய்யவில்லை. காது கேட்கும்படி செய்ய வழி கூறவும்?

ப : அருகம்புல்லை நல்லெண்ணெயுடன் காய்ச்சி வடித்து எடுத்து வைத்துக்கொண்டு தினமும் இரண்டு துளி காதில் விட்டு பஞ்சடைத்துக் கொண்டு வரவும்.

கே : ஆடுதீண்டாப்பாளை — என்ற மூலிகையை மேகநீர் சம்பந்தமான நோய்கள் தீர உபயோகிக்கலாமா? உபயோகிப்பது எப்படி? நல்ல பாம்பு, மற்ற விஷபிராணி கடிகளுக்கு எப்படி கொடுப்பது என்பதையும் தெரிவிக்கவும்?

ப : நல்ல பாம்பு கடிக்கு அதன் இலையை அரைத்து உள்ளுக்கு கொடுக்க வாந்தியாகும். விஷம் வெளியேறி நோயாளி பிழைப்பான். மேகநோய்க்கு கொடுப்பதரிது.

கே : 55 வயது நிரம்பிய ஒரு விவசாயிக்கு, இரண்டு கால்களிலும் நிறைய கரப்பான் புண்கள் உள்ளது. இதைப் போக்க அவர் எந்த மூலிகையை உபயோகிக்க வேண்டும்? சாப்பிடுவது எப்படி? மேலுக்கு என்ன போடலாம்?

ப : மேலுக்கு பூவரசன் பழுத்த இலைகளை வைத்துக் கட்டிவர வேண்டியது. உள்ளுக்கு எங்கள் மகா மூலிகை எண்ணெய் சிறந்தது.

கே : என் வயது 28. தங்கள் 'மூலிகை மணி' இதழில் கூறியிருப்பது போல கீரை வகைகளை தினசரி உணவில் சேர்த்து வருகிறேன். அப்படி இருந்தும் உடலின் உஷ்ணம் குறையவில்லை. கண்ணில் சதா எரிச்சலும், உடலில் உஷ்ணமும் அதிகமாகவே இருந்து வருகிறது. அதிகப்படியாக வேலை செய்யவும் முடிவதில்லை. இந்நிலை நீங்கி உடல் நலமடைய ஒரு வழி கூறவும்?

ப : நல்ல பழக்கம் உடையவர்களுக்கு இப்படி ஒரு தொல்லை ஏற்படுவது அரிது. ஆகவே திரைப்படம் பார்ப்பது, பாலுணர்ச்சியூட்டும் கதைகளைப் படிப்பது இவற்றைத் தடுத்தால் உடல் உஷ்ணம் குறையும். எவ்வளவு தான் குளிர்ச்சியான உணவு சாப்பிட்டாலும், மேற்கூறியவைகளால் உடல் உஷ்ணம் அதிகமாகி, கண் எரிச்சலும் அதிகமாகவே இருக்கும். மற்ற வேலைகளிலும் ஈடுபடமுடியாது.

கே : என் வயது 30. நெசவுத் தொழில் செய்பவன். சுமார் 1 மாத காலமாக சயரோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறேன். மிக ஆரம்பநிலை தான். குணமடைய ஒரு சிகிச்சை கூறவும்?

ப : நீங்கள் நெசவுத் தொழிலாளர். கால் பெருநரம்பு முதல் கண் நரம்பு வரையில் அத்தனை அங்க அவயவங்களும் அசைந்தால்

தான் நெசவுத் தொழில் செய்ய முடியும். ஆக ஒரு மாதமானாலும் கூட நோய் முற்றிய நிலைதான். சித்த மருத்துவத்தில் தாளிசாதி, பவழம், முத்து இவைகளை அளவுடன் சித்த மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட்டுவர நோய் நீங்கும்.

கே : என் வயது 18. கல்லூரி மாணவன். சிறு குழந்தையாக இருக்கும்பொழுது அம்மை வார்த்து, அந்த சமயம் சொறிந்து விட்டதால், உடல் முழுவதும் புண்கள் கிளம்பி, பிறகு டாக்டரிடம் காட்டி, களிம்பு, ஊசிகள் போட்டு கொஞ்சம் கொஞ்சமாக குணம் கண்டேன். இப்பொழுது முழங்கால் முன்னும் பின்னும் நீர் தங்கி, தோல் கறுத்து, தடிப்புகள் உண்டாகி, புண்களாகி நீர் சுரக்கின்றது. இந்நிலை நீங்கி பூரண குணம் பெற ஒரு வழி கூறுங்கள் ?

ப : தினமும் பச்சை அருகம்புல் ஒரு கைப்பிடி எடுத்து மைபோல் அரைத்து ஒரு நெல்லிக்காயளவு வாயிலிட்டு ஆழாக்கு பசும்பால் சாப்பிட்டு வரவும். நோய் குணமாவது தெரியும்.

கே : என் வயது 24. காலையில் தோசை, இட்லி அல்லது நீராகாரம் உட்கொண்டவுடன் ஐந்து நிமிடங்களுக்குள் வயிற்றுவலி லேசாக ஏற்பட்டு, மலம் கழிக்கிறேன். இம் மாதிரி 1 வருடமாக இருக்கிறது. என்னிடம் எந்த கெட்ட பழக்கமும் கிடையாது. இந்த நோயை அறவே ஒழிக்க என்ன செய்யலாம் ?

ப : இதைக் கணச்சூடு என்பார்கள். இரவில் படுக்கு முன் ஒரு தேக்கரண்டி ஆமணக்கெண்ணெய் சாப்பிட்டுவர கணச்சூடு குறைந்து சாப்பிட்ட பின் மலங்கழிக்கும் பழக்கம் நின்றுவிடும்.

கே : எனக்கு வயது 40. இரவில் விழித்துக்கொண்டதும் சுமார் 7, 8 தடவை காறிக் காறி துப்பிக்கொண்டே இருக்கிறேன். துப்பும் போது சளி வருவதில்லை. வெறும் எச்சில் மட்டும் வரும். இருமல் கிடையாது. பகலில் சில நாட்களில் இம்மாதிரி ஏற்படுகிறது. ஆங்கில முறை மருத்துவம் பலனளிக்கவில்லை. தாங்கள் மூலிகை மணியில், 'சித்தரத்தை'யைப் பற்றி எழுதி இருந்தீர்கள். அதை நான் உபயோகித்து வரலாமா? எப்படி உபயோகிப்பது? அல்லது வேறு மருத்துவம் கூறவும் ?

ப : அதிமதுரம் பால் என்பது நாட்டு மருந்துக் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி வைத்துக் கொண்டு ஒரு சிறு துண்டு உடைத்து வாயில் அடக்கிக்கொள்ள எச்சில் வராது.

கே : என் வயது 23. 4, 5 ஆண்டுகளுக்கு முன் தலைவலி ஆரம்பித்து, ஒரு சமயம் வலது பக்கமும், மற்றொரு சமயம் இடது பக்கமும் தலைவலி உண்டாகிறது. கண்களைத் திறக்க முடியாத அளவில் வலி உண்டாகிறது. சில சமயங்களில் வாந்தி உண்டாவதும் உண்டு. வெய்யிலில் சென்றாலும், அழுதாலும் தலை வலிக்கிறது. இதுவரை மருந்துகள் சாப்பிட்டு, ஊசிகள் போட்டும் பயன் தரவில்லை. எனவே நாள்பட்ட இந்த தலைவலியைப் போக்க ஒரு நல்ல மருத்துவம் கூறவும்?

ப : சவுரிப்பழம் ஒன்று இடித்து நல்லெண்ணெய் 300 மில்லி கலந்து காய்ச்சி வடித்து வைத்துக்கொண்டு ஒன்று விட்டு ஒரு நாள் தலைமுழுகிவர நாள்பட்ட தலைவலி நீங்கிப்போகும்.

இதய ஒலி!

P. B. S. மணியன், 21—8—74
ஆசிரியர். கோவில்பட்டி.

"Never think it is by chances
but ever think it is by God"

என்று திரு. சுவாமி விவேகானந்தா கூறியது போன்று, எல்லாம் ஆண்டவனுல் தான் என மிக ஆணித்தரமாக, தாங்கள் எழுதிய 'நம் நாட்டு மூலிகைகள்' என்ற நூல்களின் மூலம் பயனடைந்தவர்கள் பலர். தங்களின் சேவையால் மக்கள் இன்றும் பலன் அடைந்து வருவது மறுக்க இயலாத ஒன்று. தங்களின் சுயநலமற்ற தொண்டு கண்டு என் உள்ளம் பூரிக்கின்றது. தங்களின் சேவை மக்களுக்கு மிகவும் தேவை என்பதால் தாங்கள் நீண்ட ஆயுள் பெற்று வாழ, யான் அம்மையப்பனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு, P. B. S. மணியன்

G. கோவிந்ததாஸ், 8—8—74
கோயமுத்தூர்.

சித்த வைத்தியர் திரு. கண்ணப்பர் அவர்களுக்கு,

ஐயா, எனக்கு வயது 65 ஆகிறது. நான் பஸ் ஓட்டும் தொழில் செய்பவன். 10 நாட்களுக்கு முன் என்னுடைய பீஜம் வீங்கி வலி உண்டாகி வேலை செய்ய ரொம்ப கஷ்டமாகிவிட்டது. தங்கள் நூலில் கூறியிருந்தபடி, உடனே கழற்சிக்காய் விதையை உலர்த்தி சூரணம் செய்து வஸ்திரகாயம் செய்து வைத்துக்கொண்டு 10 நாட்கள் சாப்பிட்டதில் பூரணமாகச் சுகமாகிவிட்டது. தங்களுக்கு என் மனப்பூர்வமாக நன்றியைத் தெரியப்படுத்துகிறேன். வாழ்க சித்த வைத்தியம்!

தங்கள் அன்புள்ள, G கோவிந்ததாஸ்

P. C. பாலகிருஷ்ணன், 1-66, அஞ்சல் நிலையத் தெரு,
மனசை. P. O போளூர் Tk.

ஐயா, நான் ஒரு முருக பக்தன். எனக்குத் துணையாக படிக்க எந்த இதழையும் விரும்பவில்லை. காரணம் நல்வழிப்படுத்தும் புத்தகம் எதுவும் இல்லை என்று இருந்தேன். எனவே, அரசியல் துணைவனை துக்ளக் வாசித்து வந்தேன். நான் ஒருமுறை போளூருக்கு துக்ளக் இதழ் வாங்க சென்று இருந்தேன். அப்போது அந்தக் கடையில், 'மூலிகை மணி' என்று ஒரு புத்தகம் தொங்கிக்கொண்டு இருந்தது. அதை வாங்கிப் படித்துப் பார்த்தேன். அப்போது தான் தங்களின் பயன்கருதாப் பணியை—இப்படி தலையில் அடித்துக்கொண்டு கட்டுரைகளை வரைந்து தள்ளி 'இருக்கிறீர்கள் என்று எண்ணினேன். தங்கள் பணி மேன்மேலும் சிறக்க முருகன் அருள்புரிவாராக.

இங்ஙனம், P. C. பாலகிருஷ்ணன்

உ

முருகா.

சித்தர்கள் அருளிய

யோக இரகசியம்

[A. கமாலுதீன், பூலாம்பாடி P. O. பெரம்பலூர் Tk.]

கடவுளைத் தவிர்த்து வேருெரு பொருள் இல்லாததால், வேருெரு பொருள் ஒன்று இருந்து, அதை எடுத்து கடவுள் எல்லாவற்றையும் படைத்தார் என்பதில்லை. எல்லாமாகப் பரிணமித்திருப்பதே கடவுள்.

(உதாரணம்) விதையானது வேருெரு பொருள் ஒன்றை எடுத்து மரத்தை உண்டாக்கவில்லை. மரமாகப் பரிணமித்து இருப்பதே விதை. அதாவது வேர், அடிமரம், கிளை, இலை, பூ, காய், பழம் அனைத்துமாகப் பரிணமித்து இருப்பதே விதை.

இதே போல் உலகப் பொருள்கள் அனைத்துமாகப் பரிணமித்து இருப்பதே கடவுள். இதை சொற்களால் சொல்லிவிட்டோம். இதை அறிவால் அறிந்து உணர்ந்து அனுபவிப்பதே ஞானம் (அறிவு).

இவ் வுண்மையை அறியவொட்டாமல் மறைத்திருப்பதே மாயை, திரை, இருள். மாயை என்ற திரை விலகினுல் இருள் நீங்கி ஒளியைக் காணலாம். ஒளியில் எல்லாவற்றையும் அறியலாம். அதாவது எல்லாமாக இருப்பது எது என்பதை அறியலாம். இதை அறியவொட்டாமல் மறைத்திருப்பதே மாயை என்று சொன்னேம். மாயை என்பது இருள். இருள் என்பது இரவு. ஒளி என்பது பகல். இரவு என்பது சந்திரன். பகல் என்பது சூரியன். சந்திரன் என்பது இடகலை. சூரியன் என்பது பிங்கலை. இடகலை என்பது இடது நாசியில் வரும் சுவாசம். பிங்கலை என்பது வலது நாசியில் வரும் சுவாசம். இடது நாசியில் வரும் சுவாசத்திற்கு மதி என்றும், வலது நாசியில் வரும் சுவாசத்திற்கு ரவி என்றும் பெயர். மதி என்பது பெண். ரவி என்பது ஆண்.

ஒளியில் தான் எல்லாவற்றையும் அறியலாம். எல்லாவற்றையும் அறிய இருள் இல்லாமல் செய்யவேண்டும். இருள் என்பது சந்திரகலை. சந்திரகலையை இல்லாமல் செய்தால் ஒளியாகவே அதாவது சூரியகலையாகவே இருக்கும். இந்த ஒளிக்குத் தான் அருட்பெருஞ்ஜோதி என்று பெயர். சந்திரகலை என்பது நாம். சூரியகலை என்பது அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர். நாம் என்பது மறைந்து போனுல் எஞ்சியிருப்பது அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் ஒருவர்தான்.

இருள் நிறைந்த அறையில் விளக்கை ஏற்றினால் இருள் எங்கும் ஓடிவிடாது. வெளிச்சத்திற்குள்ளேயே ஐக்கியமாகிவிடும். இருளை ஒளியில் ஐக்கியப்படுத்தியதால் அதாவது இருள் ஒளியில் ஒன்றுபட்டு விட்டதால் ஒளியாகவே ஆகிவிட்டது. இது போல சந்திரகலையை சூரியகலையோடு ஒன்றுபடுத்திவிட்டால் எப்போதும் சூரியனாகவே (ஒளியாகவே) இருக்கும். இதன் உண்மை என்னவெனில் சந்திரன் என்ற நாம், சூரியன் என்ற ஆண்டவரோடு ஒன்றிவிட்டால் ஆண்டவ ராகவே, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகவே மாறிவிடலாம்.

சந்திரகலையையும், சூரியகலையையும் ஒன்றுபடுத்துவதே அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரோடு ஒன்றுபடுத்திக்கொள்ளும் வழியாகும்.

சந்திரகலையும், சூரியகலையும் ஒன்றுபடும் இடம் சுழிமுனை என்ற இடமாகும். சுழிமுனை என்பது புருவமத்தியாகும். புருவமத்திக்கு வழங்கும் பெயர்கள் — சுழிமுனை, நெற்றி நடு, முச்சுடர், முச்சந்தி, நாற்சந்தி, நெற்றிக்கண், லலாடம், மகாமேரு, வைகுண்டம், கைலாயம், சுவர்க்கம், ஞானசபை, தில்லைவெளி, மனம் உதிக்குமிடம் என்று இன்னும் பல பெயர்கள் உண்டு.

புருவ நடுவில் இருக்கும் இடத்திற்கு சுழிமுனை என்பது பெயர். சுழிமுனையில் ஊசிமுனை அளவு ஒரு துவாரம் இருக்கிறது. இந்த துவாரம் அடைபட்டு இருக்கிறது. இந்த துவாரத்தை மிகவும் இலேசான ஏழு ஜவ்வுகள் மூடிக்கொண்டிருக்கிறது. இந்த ஜவ்வுகள் ரோஜாப் பூவின் இதழைவிட இலேசானவை. இந்த ஜவ்வால் அடைபட்டுள்ள சுழிமுனை வாசலைத் (ஊசிமுனை வாசலை) திறக்க வேண்டும். சுழிமுனை வாசலைத் திறப்பது தான் சீரங்கத்தில் வைகுண்டவாசல் திறப்பு என்றும் சிதம்பரத்தில் திரையை நீக்கி சிதம்பர இரகசியம் பார்ப்பது என்றும், முகம்மது நபி இறைவனோடு சந்தித்த மிகுராஜ் என்றும் சொல்கிறார்கள். சுழிமுனை வாசலைத் திறந்து தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் காணலாம். இதைக் குறித்து பல மகான்கள் கூறியுள்ளவை :

நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்.

நாட்டம் இரண்டும் நடுமுக்கில் வைத்திடில்
வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை. (திருமூலர்)

நெற்றிக்கு நேரே நிறைந்த ஒளிகாணில்
முற்று மழியா துடம்பு.

புருவத்திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கும் உடம்பு. (ஔவைக் குறள்)

அஹுமதர் மருகராலிக் கருள்செய்தார் அதனைக்கேண்மோ
சுகமது பெறவே நாலு தோத்திரமறிய வேண்டி
முக மது செவி கண் நெற்றி புருவமூக்கிடையே நோக்கில்
நவமணி ஒளிபோல் தீபம் நடுவே நின்றுருடுந்தானே.

தன்னையறியும் தலமேது சொல்லடி சிங்கி — அது
கண்ணிடையான நடுநிலையல்லவோ சிங்கா.
(தர்க்கலை பீர் முகம்மது)

○ மூக்கு முனையை முழித்திருந்து பாராமல்
ஆக்கை கெட்டு நானும் அறிவழிந்தேன் பூரணமே.
○ மூக்குமுனை என்பது புருவநடு. (பட்டினத்தார்)

நயனத்திடைபோய் நண்ணும் பரவெளியில்
சயனித்திருந்து தலைப்படுவ தெக்காலம். (பத்திரகிரியார்)

இதைத் தான் வடலூர் வள்ளல் பெருமான் அவர்களும்,

தனித்த பரநாதமுடி தலத்தின்மிசை தலத்தே
தலைவரெல்லாம் வணங்கிநின்ற தலைவன் நடராஜன்
இனித்த சுகமறிந்து கொளா இளம்பருவந்தனிலே
என் புருவநடு விருந்தான் பின்புகண்டேனில்லை !

என்று கூறியுள்ளார். இது அவருடைய அனுபவநிலை. புருவநடுவில் கண்டார்; ஒன்றுபட்டார்; பின்பு வேருகக் காணவில்லை. அவனும் தானும் ஒன்ருகிவிட்டனர். ஒன்ருன இடமே மௌனநிலை. அங்கு பேச்சில்லை, வேறுபாடு இல்லை. பேச்சற்ற இடம் ; எல்லாம் மௌனம்.

புருவ நடுவை வணங்காதவர்கள் யாருமே இல்லை. அந்த இடத்தை வணங்குவதுதான் சலாம் சொல்லுவது, வணக்கம், வந்தனம், நமஸ்காரம் என்பது, கும்பிடுகிறேன் என்பது எல்லாம் புருவ நடுவை வணங்குவது தான். இன்னும் நெற்றியில் நாமம் போடுவது, பொட்டு வைப்பது, விபூதி அணிவது அனைத்தும் புருவநடுவைக் குறிப்பிடுவதே ஆகும்.

புருவ நடுவிலுள்ள சுழிமுனை வாசலைத் திறப்பதற்கு ஒரு சாவி வேண்டும். அந்த சாவிதான் சந்திரகலையையும், சூரியகலையையும் ஒன்றுபடுத்தும் தந்திரமாகும். மூடப்பட்டிருக்கும் சுழிமுனை வாசலில் பூட்டப்பட்டிருக்கும் பூட்டு, "கையறவிலாது நடுகண் புருவப்பூட்டு" என்று வள்ளல் பெருமான் கூறுகின்றார். கைப்படாத பூட்டை கைப் படாமலேயே சிந்தையால் (நினைவால்) திறக்கவேண்டும்.

பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்
பெரு மருந்தொன்று சொல்வேன் பெட்புடன்கேளாய்
திறப்புடன் மனப்பூட்டும் சிந்தைகதவும்
திறந்திடும் வகை தெரிந்தாடாய் பாம்பே.

(பாம்பாட்டிச் சித்தர்)

புருவப்பூட்டைத் திறப்பதற்கு எட்டும், இரண்டும் இன்னதென்று அறிந்து, எட்டையும் இரண்டையும் கூட்டிவிட்டால் சுழிமுனை வாசலைத் திறந்து விடலாம் என்றும், இந்த முறையில் தான் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் கண்டு களித்ததாகவும் வள்ளல்பெருமான் கூறுகின்றார்.

பெட்டியிதி லுலவாத பெரும்பொருள் உண்டிது நீ
பெருகவென்று அதுதிறக்கும் பெருந்திறவு கோலும்
எட்டிரண்டும் தெரியாதேன் என்கையிலே கொடுத்தீர்
இது தருணம் திறந்ததனை எடுக்க முயல்கின்றேன்.

எட்டுமிரண்டும் இதுவென்றெனக்குச் சுட்டிக்காட்டியே
எட்டாநிலையில் இருக்கப் புரிந்தாய் இட்டுக்கூட்டியே.

எட்டுமிரண்டும் என்னவென்றால் மயங்கிய என்றனுக்கே
எட்டாத நிலை எல்லாம் எட்டுவித்த குருவே.

(திருவருட்பா)

எட்டும் இரண்டும் அறியாப்பேதை எளியேன் நானையே.

(நந்தனார் கீர்த்தனை)

புருவப் பூட்டைத் (சுழிமுனையை) திறக்கும் சாவி எட்டும், இரண்டும் ஒன்றுபடுவதேயாகும். அடுத்து எட்டும், இரண்டும் என்ன வென்பதையும், எட்டையும் இரண்டையும் கூட்டும் முறையையும் பார்ப்போம்.

(தொடரும்)

மணி மொழிகள் !

— திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்

அன்பனே !

எந்தக் கூட்டத்தில் பெரியோர்களில்லையோ அது சபை ஆகாது.

எவர்கள் தருமத்தைச் சொல்லுகின்றதில்லையோ அவர்கள் பெரியோர்கள் ஆகார்கள்.

எதில் உண்மை இல்லையோ அது தருமமாகாது.

எது கரவுடன் கூடியிருக்கின்றதோ அது உண்மையாகா.

நீ உயர்வை அடைய வேண்டுமானால் உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவே எப்போதும் கருது ; "நான் மேலானவன்" என்று நினைந்து தருக்குறாதே ; சிறந்தவன் என்று எண்ணு கின்ற எண்ணத்தால் உயர்வையடைய முடியாது. ஆதலினால் உன் மனதில் தாழ்மை இருக்கட்டும்.

> " தாழ்வென்னுந் தன்மையோடு சைவமாம் சமயம்
> சாரும் ஊழ்பெறல் அரிது " — சித்தியார்

நாம் ஏன் பிறந்தோம் ? எங்கிருந்து வந்தோம் ? எங்கே போகவேண்டும் ? எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் ? இந்த உடம்பு எப்படி வந்தது ? தானே வந்ததா ? ஒருவன் தந்து வந்ததா ? தந்தவன் யார் ? அந்த ஒருவனை அடையும் வழி யாது ? அடைந்தவர்கள் யார் ? என்ற இவ்வினாக்கள் உன் உள்ளத்தில் எழுக. அவைகளை நீ உணர்க. வந்த வேலையைச் செய். வந்த வேலையை மறந்து மயங்கித் திரியாதே !

உலகத்திலே நீ இரு. ஆனால் உலகம் உன்னிடத்தில் இருக்கக் கூடாது.

குடும்பத்தில் நீ இரு. ஆனால், குடும்பம் உன்னிடத்தில் இருக்கக் கூடாது.

உலகமும், குடும்பமும் உன்னிடத்தில் புகுந்தால் நீ அழுந்திடுவாய்.

உ

மூலிகை அகராதி

— முன் மாதத் தொடர்ச்சி

நெருஞ்சில்

வேறு பெயர்கள் :— திரிகண்டம், திரிகண்டகம், திறிதண்டம், நெருஞ்சி, தும்பு, அசுவசட்டிரம், சுவதட்டம், கோகண்டம், காமரசி, சுவாதுகண்டம், கிட்டிரம், கோண்டம், சுதம். ஆங்கிலம் : திரிபுலஸ், டெரிஸ்ட்ரிஸ், தெலுங்கு : பல்லேறு, மலையாளம் : நெருஞ்சி, சமஸ்கிருதம் : கோக்ஷ்ரா, இந்தி : கோகுரு.

விபரம்

இது தரையில் புல் இனங்களுடன் சேர்ந்து வளரும் ஒருவகை முட்செடி. இதன் முள் காலில் நறுக்கென்று ஏறும். மருத்துவப் பயன் மிகுந்த மூலிகை. இதில் சிறுநெருஞ்சில், பெருநெருஞ்சில், யானை நெருஞ்சில் என மூன்று உண்டு. குணம் யாவும் ஒன்றே.

உபயோக உறுப்பு—சமூலம்

சுவை : துவர்ப்பு, இனிப்பு, விர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணாதிசயம்

துவர்ப்பி, உரமாக்கி, சிறுநீர் பெருக்கி, உள்ளழல் ஆற்றி, காமம் பெருக்கி, குளிர்ச்சியுண்டாக்கி.

நெல்லி

வேறு பெயர்கள் :— ஆமலகம், மெருந்து, ஆம்பல், மிருதுபாலா, ஆலகம், கோரங்கம், தத்தாரி, ஆமரிகம், தாத்ரி, ஆங்கிலம் : பைலான் தஸ், எம்பிலிகா, இண்டியன் உஸ்பெரி. தெலுங்கு : உசிரிகா. மலையாளம் : நெலிகாயா, சமஸ்கிருதம் : ஆமலகி, இந்தி : அம்லிகா, அராபி : அம்லிஜ்.

விபரம்

இது இந்தியாவெங்கும் வளரக்கூடிய சிறுமர வகுப்பு. இதன் காய் உருண்டையாக இருக்கும். மருத்துவப் பயன் மிகுந்தது.

உபயோக உறுப்பு

இலே, பூ, பட்டை, வேர், விதை, காய்.

சுவை : புளிப்பு, இனிப்பு, துவர்ப்பு, வீர்யம் : சீதம், பிரிவு : இனிப்பு

குணாதிசயம்

துவர்ப்பி, குளிர்ச்சியுண்டாக்கி, உரமாக்கி, மலம் விலக்கி, சிறுநீர் பெருக்கி, கபப் பிணி விலக்கி, முத்தோடமகற்றி.

நேர்வாளம்

வேறு பெயர்கள் :— நாலனம், சிறுகுறுஞ்சி, நாககந்தி, தெந்தி, நாகதெந்தி, தந்தி, வாளம், நேபாளம், சித்துருவம், சம்பரி, சேவாலயம், சோவி. ஆங்கிலம் : கிரோட்டன் டிலியம், தெலுங்கு : நாகபாளம், மலேயாளம் : நெருவாளம், கன்னடம் : யபாலா பீஜா, சமஸ்கிருதம் : தந்தி, உருது : அப்ஹல் சலாடின், இந்தி : ஜமால் கோட்டா.

விபரம்

இது நேப்பாளத்தில் உற்பத்தி அதிகம். அக் காரணமுற்றே இதற்கு நேப்பாளம் என்று பெயர் வந்தது. தற்காலம் இது மொலுகஸ், இலங்கை முதலிய இடங்களில் பயிராகிறது. இதன் விதை ஏறக்குறைய ஒரு பெரிய ஆமணக்கு விதைப் பருமனுக இருக்கும். மேல் ஓடும், உடைத்தால் உள்பருப்பும், பருப்பின் மத்தியில் இலேயும் இருக்கும். விதையில் இருந்து எண்ணெ எடுக்கலாம். பருப்பின் நடுவில் இருக்கின்ற இலேயை எடுக்காமலும், நன்ருக சுத்தி செய்யாமலும் வழங்கின் வாந்தி, பேதி, ஏப்பம், வயிறு, ஆசனம் இவ்விடங்களில் கடுப்பு முதலிய பலப்பல துன்பங்கள் நேரிடும். அன்றி அதிகமாய் சுத்தி செய்யினும் இதன் வீர்யம் போய்விடும். ஆகவே மிக ஜாக்கிரதையாக வழங்கல் வேண்டும். அஃதன்றி வழங்கின் சரீர சுகம் கெடும். துர்ப்பலம் நேரிடும், முகம் அதைத்து தேகம் அதிக வெப்பம் கொள்ளும். மேல்நாட்டார் இவ்விதையினின்றும் எண்ணெய் எடுத்து மிகச்சிறிய அளவில் உபயோகிக்கிருர்கள்.

உபயோக உறுப்பு—விதை

சுவை : கைப்பு, வீர்யம் : வெப்பம், பிரிவு : கார்ப்பு

குணாதிசயம்

நீர் மலம் போக்கி, வெப்பம் உண்டாக்கி, தடிப்புண்டாக்கி.

(தொடரும்)

எமது வெளியீடுகள் :

நம் நாட்டு மூலிகைகள்	1-ம் பாகம்	ரூ. 4	00
நம் நாட்டு மூலிகைகள்	2-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	3-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	4-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	5-ம் பாகம்	4	00
நம் நாட்டு மூலிகைகள்	6-ம் பாகம்	4	00
நோயும் மருந்தும்	1-2 பாகம்	3	00
நோயும் மருந்தும்	3-4 பாகம்	3	00
விஷ ஜந்துக்களும் மூலிகைகளும்		4	00
சித்த மருத்துவத்தின் கருப்பொருள்		2	00
புகழ் பெற்ற மூலிகைகள்		0	60
மனித உறுப்புக்களில் மூலிகைகளின் குணாதிசயங்கள்		0	60
பயன் தரும் பத்துக் கீரைகள்		0	60
சக்தி தரும் சஞ்சீவி மூலிகைகள்		0	60
குழந்தைப் பிணிகளும் மூலிகை மருத்துவமும்		0	60

ஒரு புத்தகத்திற்கு
தபால் செலவு 25-காசு சேர்த்து அனுப்பவும்.

மொத்த புத்தகமும் தபாலில் பெற
புத்தக விலையுடன் ரூ. 3—00 சேர்த்து கீழ்க்கண்ட
முகவரிக்கு மணியாடர் அனுப்பி பெறலாம்.

முகவரி :-

ஆ. இரா. கண்ணப்பர்,
மூலிகை மணி அலுவலகம்
59, மாசிலாமணி முதலி தெரு, வேலூர்-1. (வ. ஆ.)

Printed at Mooligai Mani (P) Press, Vellore. N. A.
Printer, Editor & Publisher Dr. A. R. Kannappar, R. M. P
59. Masilamani Mudali Street, Vellore-632001.